இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்
இறுதிப் பரீட்சை **2006/2007 –** முதலாம் கல்வித்தவணை
கல்வித்தொழினுட்பம் - **ESP1204**

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 18.03.2007 நேரம் : பி.ப 1.30 – பி.ப. 4..30

## அறிவுறுத்தல்கள்

இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டது. பகுதி **I** இலிருந்து முதலாம் வினா உட்பட மூன்று வினாக்களுக்கும், பகுதி **II** இலிருந்து இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக. மொத்தம் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

பகுதி **II** இல் ஒரே விசேட பாடத்திலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவுசெய்வது விரும்பத்தக்கது.

விடையளித்து முடிந்ததும் பின்வரும் நடைமுறையைப் பின்பற்றுக.

பகுதி **II** இன் வினாத்தாளில் முதற்பக்கத்தில் காணப்படும் இடைவெளியில் உங்களால் தெரிவுசெய்யப்பட்ட விசேட பாடத்தின் பெயரைத் தயவுசெய்து தெளிவாக எழுதவும். பின்னர் பகுதி **I** விடைத்தாளின்மேல், பகுதி **II** விடைத்தாளை வைத்து இரண்டையும் சேர்த்துக் கட்டி ஒப்படைக்கவும்.

## பகுதி I

01. (i) ''டேலின் அனுபவக்கூம்பு'' என்பதனால் கருதப்படுவது யாது என்பதைச் சுருக்கமாக விளக்குக.

(ii) ''கல்வித்தொழினுட்பம்'' என்பதைச் சுருக்கமான வரைவிலக்கணத்தின் ஊடாக அறிமுகப்படுத்துக.

(iii) கற்றல் அதிக வினைத்திறனுடையதும் ஞாபகமுள்ள அனுபவமாக அமைவதற்கும் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் மூன்றை (03) விளக்குக.

(iv) கற்றல் துணைகளில் உள்ளடங்கவேண்டிய பிரதான இயல்புகள் ஐந்தை (05) பட்டியற்படுத்துக.

(v) மாணவர்மைய முறையில் எழுதக்கூடிய நடத்தைசார் நோக்கங்களின் மூன்று (03) இயல்புகளைக் குறிப்பிடுக.

(vi) பிரச்சினை தீர்த்தல் முறையின் அனுகூலங்கள் ஐந்தைத் (05) தருக.

(vii) குழுமுறைக் கற்பித்தல் முறைமையினைப் பயன்படுத்துகையில் பெறக்கூடிய நன்மைகள் நான்கை (04) பட்டியற்படுத்துக.

(viii) பாடமொன்றைக் கற்பிக்கையில் ஆசிரியர் கற்றலை எளிதுபடுத்துபவராக இருப்பதற்கு கவனிக்கவேண்டிய பிரதான செயற்பாடுகள் மூன்றை (03) உதாரணங்கள் மூலம் விளக்குக.

02. (i) வகுப்பறைக் கற்பித்தலுக்கு விரிவுரை முறையினைப் பயன் படுத்துகையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மூன்றை (03) சுருக்கமாக ஆராய்க.

(ii) மேலே குறிப்பிட்ட பிரச்சினைகள் ஒவ்வொன்றையும் தீர்ப்பதற்கு நீங்கள் முன்வைக்கக்கூடிய ஆலோசனைகளை விளக்குக.

03. (i) "கற்பித்தல் முறைமை" என்பதனால் நீர் யாது கருதுகின்றீர்?

(ii) பல்தரக் கற்பித்தல் முறைமை தொடர்பான பிரச்சினைகள் மூன்றை (03) ஆராய்க.

(iii) அணிமுறைக் கற்பித்தல் முறைமையின் உச்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் கவனத்தில் எடுக்கவேண்டிய காரணிகள் மூன்றை (03) உதாரணங்களுடன் விளக்குக.

04. (i) பாடமொன்றினைத் திட்டமிடுகையில் கவனத்திற் கொள்ளவேண்டிய முக்கிய காரணிகள் ஐந்தை (05) விளக்குக.

(ii) பாடமொன்றினைத் திட்டமிடுகையில் ஆசிரியர் பெறக்கூடிய அனுகூலங்களை உதாரணங்களுடன் விளக்குக.

(iii) வகுப்பறையினுள் வெற்றிகரமான கற்றல்-கற்பித்தல் நிலைமை யினை ஏற்படுத்துவதற்கு ஆசிரியரது வகிபங்கின் முக்கியத்துவத் தினைச் சுருக்கமாக ஆராய்க.

05. பின்வரும் தலைப்புகளில் மூன்றிற்கு (03) சிறுகுறிப்பு எழுதுக.

(i) அறிவுசார் ஆட்சி தொடர்பான புளூமின் பகுப்பாய்வு.

(ii) களப்பயணம்.

(iii) பொருத்தமான கற்பித்தல் முறையினைத் தெரிவுசெய்கையில் கவனத்திலெடுக்க வேண்டிய காரணிகள்.

(iv) செய்திட்ட முறையின் அனுகூலங்களும் பிரதிகூலங்களும்.

- பதிப்புரிமை உடையது -

## பகுதி II

## கல்வித் தொழினுட்பம் - ESP1204

## பாடஎண் 03 - தமிழ்மொழி

06. (i) மொழி பற்றி மொழியியலாளர்கள் கூறியுள்ள வரைவிலக்கணங்களைக் கருத்திற்கொண்டு மொழி என்றால் என்ன என விளக்குக.

(ii) மொழியின் இயல்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றையும் விவரிக்க.

(iii) பிள்ளைகள் மொழியை எவ்வாறு கற்றுக்கொள்கின்றனர் என்பது பற்றி மொழியியலாளர்கள் இருவர் கூறிய கருத்துக்களை முன்வைக்க.

07. (i) உரைநடைப் பகுதிகளைக் கற்பித்தலின் நான்கு பிரதான நோக்கங்களைக் குறிப்பிடுக.

(ii) இடைநிலை வகுப்பொன்றில் 40 நிமிடம் கொண்ட ஒரு பாடவேளையில் கற்பிக்கக்கூடிய ஓர் உரைநடைப் பகுதியைத் தெரிவுசெய்து, அதனைக் கற்பிப்பதன்மூலம் மாணவர் அடையவேண்டும் என நீங்கள் எதிர்பார்க்கும் குறிக்கோள்களை அட்டவணைப்படுத்துக.

(iii) இக்குறிக்கோள்களை அடையக்கூடியவாறு குறிப்பிட்ட அப்பாடப்பகுதியைப் படிமுறையாக எவ்வாறு கற்பிக்கலாம் என விளக்குக.

08. (i) "கவிதையின் வாயிலாக கவிஞனின் அனுபவம் வாசகனின் அனுபவமாகிறது" - இக்கூற்றினைப் பொருத்தமான உதாரணம் தந்து சுருக்கமாக ஆராய்க.

(ii) கவிதை ஒன்றில் நயந்து அனுபவிக்கக்கூடிய பிரதான அம்சங்களை உதாரணங்கள் தந்து விளக்குக.

(iii) மாணவரைக் கவிதை நுகர்ச்சியில் ஈடுபடச் செய்வதற்கு வகுப்பறையில் எத்தகைய உத்திகளைக் கையாள்வீர்கள் என விபரிக்க.

09. பின்வரும் தலைப்புகளில் இரண்டினைத் தெரிவுசெய்து அவை ஒவ்வொன்று பற்றியும் சுருக்கக்குறிப்புகள் எழுதுக.

(i) மொழி கற்பித்தலில் 5E மாதிரியின் (5E Model) பயன்பாடு.

(ii) இடைநிலை வகுப்புகளில் இலக்கணம் கற்பிக்கும்போது கையாளப்படக் கூடிய கற்பித்தல் முறைகள்.

(iii) இடைநிலை வகுப்பு மாணவர்களின் மொழி விருத்தியில் பாடசாலைமட்டக் கணிப்பீட்டின் பயன்பாடு.

- பதிப்புரிமை உடையது -

## பகுதி II

## கல்வித் தொழினுட்பம் - ESP1204

## பாடஎண் 12 - இந்துசமயம்

06. (i) "இளைஞர்களுக்கு சமயக்கல்வி அனுபவங்களைப் பெற்றுக்கொடுப்பதன் மூலமும் சமயம் பற்றிய அறிவையும் விளக்கத்தையும் பெற்றுக்கொடுத்தல் மூலமும் சமய நம்பிக்கை, சமய உள்ளுணர்வு முதலியவற்றைப் பெறச் செய்யலாம்; சமயச் செயற்பாடுகளில் ஈடுபாடு கொள்ளச் செய்யலாம்". - இக்கூற்றினை ஆராய்க.

(ii) இலங்கையில் இடைநிலை வகுப்புகளில் சைவநெறியினை ஒரு பாடமாகக் கற்பிப்பதன் நோக்கங்களை விளக்குக.

07. (i) சைவநெறி அல்லது இந்துசமயம் கற்பிக்கும்போது கையாளப்படக்கூடிய முறைகள் நான்கினைப் பொருத்தமான உதாரணங்கள் தந்து விளக்குக.

(ii) இக்கற்பித்தல் முறைகளுக்குப் பொருத்தமாக எத்தகைய கற்பித்தல் துணைச்சாதனங்களைப் பயன்படுத்துவீர்கள் என விளக்குக.

08. (i) சைவநெறிப் பாடம் கற்பித்தலில் பாடசாலைமட்டக் கணிப்பீட்டின் முக்கியத்துவத்தினை ஆராய்க.

(ii) தரம் 8 தொடக்கம் தரம் 11 வரையிலான வகுப்புகளில் சைவநெறிப் பாடம் தொடர்பான ஒரு பாட அலகினைத் தெரிவுசெய்க. அப்பாட அலகு தொடர்பாக மாணவரின் அடைவினைப் பரீட்சிக்கும் வகையில் பின்வரும் மதிப்பீட்டு வகை வினாக்கள் தயாரிக்க.

(1) குறுவிடை வினாக்கள் - நான்கு
(2) பல்தேர்வு வினாக்கள் - நான்கு
(3) கட்டமைப்பு வினா - ஒன்று
(4) கட்டுரைவகை வினா - ஒன்று

09. பின்வரும் தலைப்புகளுள் இரண்டினைத் தெரிவுசெய்து விளக்கக் குறிப்புகள் எழுதுக.

(i) சமயம் கற்பித்தலில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் பங்கு

(ii) க. பொ. த. உயர்தர வகுப்புகளில் இந்துநாகரிகப் பாடம் கற்பித்தலின் நோக்கங்கள்.

(iii) சமயம் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரின் பல்வகைப்பட்ட வகிபங்குகள்.

- பதிப்புரிமை உடையது -

## பகுதி II

## கல்வித் தொழினுட்பம் - ESP1204

## பாடஎண் 13 - இஸ்லாம்

06. (i) இடைநிலை வகுப்புகளில் இஸ்லாம் கற்பிக்கும்போது பயன்படுத்தக்கூடிய மூன்று கற்பித்தல் முறைகளைக் குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றையும் எவ்வாறு பயன்படுத்துவீர்கள் எனப் பொருத்தமான உதாரணங்கள் தந்து விளக்குக. (09 புள்ளிகள்)

(ii) இணைப்பாடவிதான செயற்பாடுகள் மூலம் எவ்வாறு மாணவர்களிடையே இஸ்லாம்சமய உணர்வினை நீங்கள் மேம்படுத்துவீர்கள் என விபரிக்குக. (06 புள்ளிகள்)

07. (i) இஸ்லாம் பாடத்திட்டத்தில் விருப்பமான ஓர் அலகை விருப்பமான வகுப்பொன்றிலிருந்து தெரிவுசெய்து அதனைக் கற்பிப்பதற்கான ஐந்து நடத்தைசார் நோக்கங்களை எழுதுக. (05 புள்ளிகள்)

(ii) நீங்கள் குறிப்பிட்ட நடத்தைசார் நோக்கங்களை அடைந்துள்ளீர்களா என்பதை மதிப்பிடுவதற்காக ஐந்து பல்தேர்வு வினாக்களையும் இரண்டு கட்டமைப்பு வினாக்களையும் அமைக்க. (10 புள்ளிகள்)

08. இஸ்லாம்பாட ஆசிரியர் ஒருவருக்கு இஸ்லாத்தில் தமது கற்றல்-கற்பித்தல் செயன்முறையினை வினைத்திறனுடன் விருத்திசெய்வதற்கு

(அ) தொலைக்காட்சிப்பெட்டி

(ஆ) கணினி

(இ) பாடநூல் என்பவற்றைப் பயன்படுத்தும் முறையினை ஆராய்க. (15 புள்ளிகள்)

09. பின்வரும் தொனிப்பொருள்களில் எவையேனும் மூன்றிற்கு சிறுகுறிப்புகள் எழுதுக.

(i) வகுப்பறைக்குள் மட்டும் கட்டுப்படுத்தி இஸ்லாம் பாடத்தைக் கற்க முடியாது.

(ii) இலங்கையில் கனிஷ்ட, இடைநிலை வகுப்புகளில் இஸ்லாம் கற்பித்தலின் பொது நோக்கங்கள்.

(iii) இன்றைய இஸ்லாம் பாட ஆசிரியர் ஒருவரின் பணி, பங்குகள் பல்வகைப்பட்டன.

(iv) இஸ்லாம் கற்பித்தலின் பிரச்சினை தீர்த்தல் முறையினைப் பயன்படுத்தல்.

(v) இஸ்லாம் கற்பித்தலுக்கு கற்றல் சாதனங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம்.

- பதிப்புரிமை உடையது –

பகுதி **II**

கல்வித் தொழினுட்பம் - **ESP1204**

பாடஎண் 14 - அழகியற்கல்வி

06. (i) அழகியற்கல்விப் பாடங்கள் தொடர்பாக தெரிவுசெய்யப்பட்ட வகுப்பொன்றுக்கான செயன்முறைப் பாடத்தைக் (Practical Lesson) கற்பிப்பதற்கான பூரணமான பாடத்திற்கான திட்டம் (Lesson plan) ஒன்றினைத் தயார் செய்க.

(ii) இப்பாடத்தின் குறிக்கோள்கள் அடையப்பட்டனவா என்பதைக் கண்டுகொள்ளப் பின்பற்றக்கூடிய இரண்டு நடைமுறைகளைக் குறிப்பிட்டு விபரிக்க.

07. மாணவரின் மனப்பாங்குசார் விருத்திக்கு அழகியற்கல்விப் பாடங்களின் பங்களிப்பினை எடுத்துக்காட்டுக.

08. “ஏனைய ஆசிரியர்களைவிட அழகியற்கல்வி ஆசிரியருக்குக் கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்துவதால் விசேட அனுகூலங்கள் பல கிடைக்கின்றன”. இக்கூற்றினை ஏற்றுக்கொள்கின்றீர்களா? ஆராய்க.

09. நீங்கள் கற்பிக்கும் அழகியற்கல்விப் பாடம் தொடர்பாக எவையேனும் இரண்டு தலைப்புகளில் சிறுகுறிப்புகள் எழுதுக.

(i) இரண்டு விசேட கற்பித்தல் முறைகள் - நடனம் / சங்கீதம் / சித்திரம்

(ii) செயன்முறைப் பாடம் ஒன்றினை விளங்கிக்கொள்வதில் மாணவர் எதிர்நோக்கும் இரண்டு பிரச்சினைகள்

(iii) அறிமுறைப் பாடம் ஒன்றினை (Theoretical Lesson) கற்பிப்பதில் ஆசிரியர் எதிர்நோக்கும் இரண்டு பிரச்சினைகள்

(iv) பாடம் ஒன்றினை (Lesson) மதிப்பீடு செய்யும் இரண்டு முறைகள்

- பதிப்புரிமை உடையது –